**இலங்கையில் TVET துறையில் தனியார் துறை மற்றும் பெண்கள் வலுவூட்டலுக்கான புதுமையான அணுகுமுறைகளை வெளிப்படுத்துதலின் - 2023**

---

இலங்கையில் TVET துறையில் தனியார் துறை மற்றும் பெண்கள் வலுவூட்டலுக்கான புதுமையான அணுகுமுறைகளை வெளிப்படுத்துதலின் 2023 சனவரி 01 முதல் ஒக்தோபர் 31 வரையான பத்து மாத காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 11 ஆம் திகதிய 9193 எஸ்ஆர்ஜ (ஈஎவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 4.02(அ) பிரிவின் IV ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்ட மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தப்படுத்தல் முகவராகவும் உள்ளது. தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி மூலம் அதிகரித்த பெண் தொழிலாளர் பங்கேற்பு மற்றும் பெண்களின் பொருளாதார வலுவூட்டலிற்கு பங்களிப்பதே செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கமாகும். செயற்திட்டமானது ஏ மற்றும் பீ ஆகிய 02 கூறுகளை கொண்டுள்ளதுடன் (i) தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியில் தனியார் துறை ஈடுபாட்டை வலுப்படுத்துதல், (ii) பெண்களை முன்னிறுத்தி சுயதொழிலிற்கான தொழில்முனைவோர் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை முன்னேற்றுதல், (iii) பாரம்பரியமற்ற பகுதிகளிற்கு பெண்களை கவர்வதற்கு பெண்களை இலக்காக கொண்ட ஊக்குவிப்புக்களை வழங்குதல், வழிகாட்டுதல் மற்றும் வேலையில் பயிற்சியை வழங்குதல், (iv) தனியார் துறையில் பாலினம் - உள்ளடங்கிய ஆட்சேர்ப்பு மற்றும் பணிச்சூழல் நடைமுறைகளை வெளிப்படுத்துதல் (v) திறன் துறையில் கொவிட்-19 தாக்கத்திற்கு திறமையான பதிலை வழங்குதல ஆகிய பெயர்களில் ஏ கூறின் கீழ் 5 வெளியீடு காணப்படுகிறது. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 534 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 3 மில்லியனாகக் காணப்பட்டதுடன் வறுமை குறைப்பிற்கான யப்பான் நிதியத்தால் (JFPR) மானியமொன்றாக நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் செயற்திட்ட நிதியிடல் நோக்கங்களிற்காக ADB ஆல் இது நிர்வகிக்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2018 நவம்பர் 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 மார்ச் 31 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2023 யூன் 30 வரை இரு தடவை நீடிக்கப்பட்டதுடன் 2023 ஒக்தோபர் 31 இல் செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2023 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| | | | |
|---|---|---|---|
| (அ) | விவசாய தொழில்நுட்ப பரவல் நிலையத்திற்கான முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் இணையத்தை உருவாக்குவதற்கு ரூபா 2.5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், காலாவதியான மற்றும் மோசடியான கூறுவிலைகள் மற்றும் விபரக்குறிப்புக்களில் சேர்க்கப்படாத அளவுகோல்களைப் பயன்படுத்தி வெளிப்படைத்தன்மையின்றி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் சேவை வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். | ஏஎஸ்எஸ்சி இற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை மேற்கொள்ளப்பட்டதென அவர்கள் உறுதிப்படுத்துகின்றனர். பெறுகை ஏஎஸ்எஸ்சீ ஆல் மேற்கொள்ளப்பட்டது. | சேவை வழங்குநர் வெளிப்படைத்தன்மையுடன் தெரிவுசெய்யப்பட வேண்டும். |
| (ஆ) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கைத்தொழில் திறன்கள் மன்றத்தால் ரூபா 11.23 மில்லியன் கிரயத்தில் தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறையில் கற்கைநெறிகளை நிறைவு செய்யும் மாணவர்கள் மற்றும் தொழிலதிபர்களை பதிவு செய்வதன் மூலம் சேவையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் கையடக்க தொலைபேசி செயலி உருவாக்கப்பட்டது. எனினும், | ஸ்ரீ லங்கா ரெலிகொம் மொபிடெல் கம்பனியுடன் பங்குடமையொன்றை தொடர்வதற்கு மன்றம் தீர்மானித்துள்ளது. பல தயாரிப்பு மதிப்பாய்வு அமர்வுகளுக்குப் பின்னர், SLT மொபிடெல் Pro Connect ஐப் பயன்படுத்துவதற்கு இணங்கியதுடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தில் (MOU) கைச்சாத்திட்டது. எனினும், அவர்களின் தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் குழுக்கள் | உருவாக்கப்பட்ட கையடக்க தொலைபேசி செயலியை அமுல்ப்படுத்துவதற்கான வசதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையடக்க தொலைபேசி செயலியை அமுல்ப்படுத்துவதற்கான வசதி இல்லாததால், செயலியில் பதிவு செய்யும் மன்றம், மாணவர்கள் மற்றும் தொழிலதிபர்கள் பயன்பெறும் வகையில் இது தற்போது அமுல்ப்படுத்தப்படவில்லை. எனவே, மேற்படி செயலியை உருவாக்குவதற்கு ஏற்பட்ட செலவினம் பயனற்றதாகியிருந்தது. | தற்போது வெவ்வேறு செயற்திட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக அவர்கள் பின்னர் மன்றத்திற்கு தெரிவித்தனர், இதனால் அவர்கள் Pro Connect இல் கவனம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. இதன் விளைவாக, தயாரிப்பு தற்போதைக்கு செயலற்ற நிலையில் உள்ளது. | |
| (இ) | 4.2.1.1 நடவடிக்கையின் கீழ் டிரோன் (drone) உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ஆராய்ச்சி அபிவிருத்தி பயிற்சி நிறுவகத்திற்கு ரூபா 8.86 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. 2024 மே 02 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கொள்வனவு செய்யப்பட்ட டிரோன் உபகரணங்கள் பயிற்சி அல்லது விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாமல் செயற்திட்ட முன்மொழிவில் கூறப்பட்டுள்ளவாறு, செயற்படுத்துவதற்கு தெரிந்த பயிற்றுவிப்பாளர் இல்லாமையாலும், நிறுவனம் பயிற்சி நிறுவனமாக முறையாக நிறுவப்பட்டிருக்காததாலும் நிறுவனத்தில் விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், நிறுவனம் நடாத்தும் பயிற்சி வகுப்புக்கள் தொடர்பாக எந்தவொரு செயன்முன்னேற்றமும் காணப்படவில்லை. | ஆராய்ச்சி அபிவிருத்தி பயிற்சி நிறுவகம் (IRDT) வட மாகாணம் முழுவதும் ASSC உடன் பயிற்சி பெற்ற 7 சான்றுபடுத்தப்பட்ட டிரோன் பைலட்களைக் (drone pilots) கொண்டுள்ளது. டிரோன்கள் ஆண்டு முழுவதும் பயன்படுத்தப்படுவதில்லை, அவை விவசாய நடவடிக்கைகளில் பருவகாலமாக பயன்படுத்தப்படுகின்றன. பருவகாலம் இல்லாத போது, உற்பத்தியாளர் வழங்கிய அறிவுறுத்தலின் பிரகாரம் டிரோன்கள் சேமிக்கப்படுகின்றன. | டிரோன் உபகரணங்களை செயற்திறனான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தொழில்முனைவோர் ஒருவருடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 1m அகலம், 0.15m தடிமன் மற்றும் 1207m நீளம் கொண்ட செடி நாற்றுமேடைக்கான வீதி வலையமைப்பை உருவாக்குவது அவசியமாகும். எனினும், ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த அளவீட்டுத் தாளின் பிரகாரம், வீதி வலையமைப்பு 1.22m அகலம், 0.15m தடிமன் மற்றும் 719m நீளம் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் தொழில்முனைவோரால் | இணங்கப்பட்டது. பட்டயப் பொறியியலாளரின் பரிந்துரையின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகிறது. எனினும், தனியார் துறை ஈடுபடுத்திய நிபுணர் பௌதீக மெய்மையாய்வை மேற்கொண்டிருக்கவில்லை. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகளை சரிபார்ப்பதற்கு, நாங்கள் தற்போது பௌதீக மெய்மையாய்வை மேற்கொண்டு வருகின்துடன் அறிக்கையைப் படித்த பின்னர் விடயத்தை சரிபார்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | millstone ஐ அடைந்துகொள்வதை சரிபார்த்து தொழில்முனைவோருக்கு பணத்தை மீள்நிரப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைக்கப்பட்ட நீளத்தை சரிபார்க்காமல் தொழில்முனைவோருக்கு ரூபா 3.22 மில்லியன் மொத்த மானியம் மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | தொழில்முனைவோர் ஒருவருக்கு 02 millstones ஐ அடைந்துகொள்வதற்கு ரூபா 3.51 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. அதில், millstone 01 இன் கீழ் NVQ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொண்டு உடன்படிக்கையின் பிரகாரம் TVEC/NAITA சான்றிதழ் மூலம் சரிபார்க்க வேண்டும். எனினும், NVQ 3 சான்றிதழ்களை வழங்குவதற்கு TVEC இற்கு மாத்திரமே அதிகாரம் உள்ள போதிலும் அத்தகைய சான்றிதழ்கள் தொடர்புடைய பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | அந்த நேரத்தில், குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு NVQ சான்றிதழை வழங்குவதற்கு பதிவுசெய்யப்பட்ட மற்றும் தராதர அங்கீகாரம் பெற்ற நிறுவனம் எதுவும் காணப்படவில்லை. எனினும், சினமன் (Cinnamon) பயிற்சி அக்கடமி இந்த சான்றிதழை வழங்குவதற்கான தராதர அங்கீகாரத்தை 2021.04.26 வரை பெற்றிருந்தது. அந்த நேரத்தில் அவர்கள் தராதர அங்கீகாரம் பெறவில்லை என்றாலும், அவர்கள் TVEC இல் சரியான பதிவைக் கொண்டிருந்தனர். எனவே, சினமன் பயிற்சி அக்கடமி வழங்கிய சான்றிதழ் அடுத்த சிறந்த தேர்வாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. | ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் NVQ சான்றிதழை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | அமைச்சுக்கான உபகரண பெறுகை உட்பட 32 சிமார்ட் வகுப்பு அறைகளை நிறுவுவதற்கு ரூபா 293.07 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 911,540 தொகை ஏற்பட்டிருந்தது, கிடைத்த தகவல்களின் பிரகாரம் 400 கற்றல் முகாமைத்துவ முறைமை (LMS) விரிவுரையாளர்களுக்காக ரூபா 5.67 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்து. எனினும், 32 பயிற்சி நிலையங்களுக்கு 320 LMS மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. எனவே, கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1.13 மில்லியன் பெறுமதியான 80 LMS மீதியின் ஒதுக்கீட்டை கணக்காய்வின் போது சரிபார்க்க முடியவில்லை. மேலும், விரிவுரையாளருக்கு ஒதுக்கப்பட்ட 320 LMS இல், 183 LMS 57 சதவீதம் கல்வி நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | விரிவுரை மற்றும் மாணவர்கள் மூலமான LMS இன் சட்டப் பயன்பாடு மற்றும் பயிற்சியின்மைக்கான காரணம் போன்றவற்றுடன் இணங்குகிறதுடன் நிதி கிடைக்கும்போது இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்தும் பயிற்சியை வழங்குவதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளது. | சிமார்ட் வகுப்பு அறையை கல்வி நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மேற்கூறியவைகளுக்கு மேலதிகமாக, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டு ஒதுக்கப்பட்ட ரூபா 45.37 மில்லியன் பெறுமதியான 3,200 LMS இல் 24 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 753 LMS மாத்திரமே கல்வி நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் விரிவுரைக்கான பயிற்சி, பயிற்சிப் பொருட்கள் மற்றும் கற்கைநெறிகளைப் பின்பற்றும் மாணவர்களுக்கான வசதிகள் இல்லாததால் மாணவர் உரிமம் எதனையும் பயன்படுத்தியிருக்காத 16 பயிற்சி நிலையங்கள் காணப்படுகின்றன. எனவே, ஆரம்ப செயற்திட்டத்தின் செயற்திறன் குறைந்த மட்டத்தில் இருந்தது.

## 2.2 உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயல்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, நிறைவேற்றல் முகவரின் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | அமலாக்கல் முகவரால் உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |